| STC No. 255/2023 | PW:1 திரு.பீட்டர் த/பெ.திரு.ஜோசப் | 08.08.2025 |
|---|---|---|

**எதிரி ஆஜரில் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு - 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**(சாட்சி Crl.M.P.No.419/2025 - 03.02.2025 தேதிய உத்தரவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு அவரது முந்தைய சாட்சிய உரைகள் அவருக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்)**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்**

**குறுக்கு விசாரணை** :

1. நான் டிப்பிளமோ இன் கம்பியூட்டர் இன்ஜினியரிங் படித்து முடித்து விட்டு தகவல் தொழில்நுட்ப துறையில் பணிபுரிந்து வருகிறேன். எதிரி டிகிரி படித்துள்ளார் என்ன படித்துள்ளார் என்று எனக்கு தெரியாது, பைனான்ஸ் துரையில் வேலை செய்கிறார். எதிரி என்ன வேலை செய்கிறார் என்று தெரியாது என்றால் முன்பு சாய்ஸ் இந்தியா என்ற நிறுவனத்தில் வேலை செய்தார்.

2. தற்போது ஆக்சஸ் செக்கியூரிட்டி நிறுவனத்தில் வேலை செய்வதாக சொன்னார்கள். எனக்கு சரியாக தெரியாது. எதிரியின் சம்பளம் எவ்வளவு என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். நான் பெங்களூரில் வேலை செய்கிறேன். கோவிடுக்கு மூன்பு பெங்களூரில் இருந்தேன் கோவிட் சமயத்தில் கூடலூரில் இருந்தேன். அதன் பிறகு கடந்த 6 மாதங்களாக பெங்களூரில் வேலை செய்து வருகிறேன்.

3. 13.12.2021ல் இருந்து 13.06.2022 வரை ரூ.14,75,500/- ரூபாய்-யை பல தவனைகளாக எதிரியின் வங்கி கணக்கில் செலுத்தியுள்ளேன். 08.07.2022 அன்று ரூ.17,24,500/- ரூபாய்-யை எதிரியிடம் ரொக்கமாக கொடுத்தேன். கூடலூாரில் இருக்கும் போது தான் மேற்படி ரூ.17,24,500/- ரூபாய்-யை கொடுத்தேன். நாங்கள் ஜீன்ஜர் வியாபாரம் செய்கிறோம், விவசாயம் செய்கிறோம், கட்டுமான தொழில் செய்கிறோம். அதற்காக வைத்திருந்த பணத்தை நான் எதிரியிடம் கொடுத்தேன்.

4. மிளகு, காப்பி, இஞ்சி, ஆகியவை விற்று பணத்தை நான் கொடுத்தேன் என்றால் சரிதான். 2021 முதல் 2022 வரை ஒரு வருடமாக மிளகு, காப்பி, இஞ்சி போன்றவை விற்று வைத்திருந்த பணத்தை நான் எதிரிக்கு கொடுத்தேன். நான் என்னுடைய காரை விற்பனை செய்திருந்தேன். அந்த பணத்தையும் சேர்த்து தான் எதிரிக்கு கொடுத்தேன்.

Taken down by me in open Court read over / interpreted to the witness and same has been admitted by the witness to be correct.

**Sd/- G.SARAVANAKUMAR, B.A., B.L., (HON'S)**
**PRINCIPAL DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, GUDALUR.**